(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களின் கீழ் உள்ள கல்லூரிகளில் ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்'' (வேலை வாய்ப்புத் தரக்கூடிய பிரிவுகள்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுமக்கள் தொடர்பு, புத்தகத் தொழில், சுற்றுலாக் கல்வி, சத்துள்ள உணவு வகைகள், கார்ப்பரேட் செக்ரடரிஷிப், கூட்டுறவு, ராணுவப்பயிற்சி, குழந்தை மற்றும் குடும்பநலம், இசைப்பயிற்சி, மின்சாரப் பொறியியல், பண்ணைகள் இயல், ரப்பர் தொழில் நுட்பம், வியாபார நிர்வாகம் போன்ற பல்வேறு பிரிவுகள், ''ஜாப் ஓரியன்டெட் கோர்ஸ்''ன் கீழ் பல்வேறு கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்கள்

*833 வினா— திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78ஆம் ஆண்டில் தற்காலிகமாக கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

பயிற்றுநர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ..	285 பேர்
உதவிப் பேராசிரியர்கள்	217 பேர்

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, நூற்றுக் கணக்கானவர்கள் தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக் கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் களில் 6 மாத காலம் பணியாற்றியவர்களும் உண்டு, 6 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களும் உண்டு, அவர்களுக்கு எதிர்காலத் தில் மாற்றுத் திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுடைய பிரச்சினையை அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்று அவர்களுக்கு உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது.

1978 ஏப்ரல் 7]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையிலே தற்காலிகமாகப் பணியாற்றிவரக்கூடிய ஆசிரியர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாமல் இருக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? தற்காலிகமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் எந்தக் கல்லூரிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்களோ அந்தக் கல்லூரிகளிலேயே தொடர்ந்து வேலை பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறதா? அதே நேரத்திலே பல இடங்களிலே அவர்கள் வெளியேற்றப்படுவதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 திட்டத்தின் காரணமாக வேலை இழப்பு ஏற்படாது என்று அரசு ஆசிரியர்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறது. ஆனால் தற்காலிக ஆசிரியர்களைப்பற்றி அரசு முடிவு எடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது, காரணம் அது தேர்வு ஆணைக் குழுவின்கீழ் வருகிறது, தேர்வு ஆணைக் குழுவின் அதிகாரத்தை அரசு எடுத்துக் கொள்ளமுடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே கல்லூரிகளிலே உள்ள வேலைவாய்ப்புக்களை கல்லூரிகளில் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் வயது வரம்பைத் தாண்டும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க தேர்வாணையில் சில மாற்றங்களைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதுபற்றிய யோசனைகள் அனுதாபத்தோடு அரசு பரிசீலிக்கும் என்பதிலே அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற முறையில் ஏற்கனவே ஹைஸ்கூல்களில் வேலை செய்கின்ற ஒரு குறிப்பிட்ட சர்வீஸ் இருக்கிறவர்களை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது படித்துவிட்டு அந்தக் கல்லூரிகளிலே பேராசிரியர் பதவிக்குத் தகுதிபெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அவர்களை, சர்வீஸ் கமிஷன் மூலமாக இல்லாமல், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக இல்லாமல், அவர்கள் மனுச் செய்துகொண்டால் அவர்களை எடுத்துக்கொள்கிற முறை கையாளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, வேலையில் இருக்கிறவர்களுக்கு வேலையில்லாமல் வேலையிழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்குத்தான் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

திரு.ரா.கு.பெருமாள்: தலைவர் அவர்களே, இந்த 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற கல்வித் திட்டத்தில் ஒரே ஒரு தலைமை ஆசிரியர் தான் இருப்பாரா? அல்லது ப்ளஸ் 2க்கு தனி தலைமை ஆசிரியர் இருப்பாரா? அப்படியானுல் அவர்தான் 10வது வகுப்பு வரையில் உள்ள பள்ளிக்கும் தலைமையாசிரியராக இருப்பாரா?

மாண்புமிகு திரு. செ.அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூலுக்கு ஒரே ஒரு தலைமையாசிரியர்தான்.

திரு. செ.சதாசிவம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூல்களிலே இப்போது இருக்கின்ற தலைமை ஆசிரியர்கள் பி.ஏ., பி.டியாக இருக்கிருர்கள், அவர்களை மாற்றி எம்.ஏ.படித்தவர்களை, கல்லூரிகளில் இருக்கிறவர்களை நியமிக்கப்போகிருர்களா அல்லது ஏற்கனவே இருக்கிறவர்களையே நியமிக்கப்போகிருர்களா?

மாண்புமிகு திரு. செ.அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்கான தகுதிகள், வரையறுக்கப்பட்ட தகுதிகள் இருக்குமானுல் அவர்களே இருக்கலாம்.

உதகமண்டலத்தில் வெளிப்புற விளையாட்டு அரங்கம்

*834 வினு—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் ஒரு வெளிப்புற விளையாட்டு அரங்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு.செ.அரங்கநாயகம்: ஆம். ஐயா.

திரு. போ.கோபாலன்: தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலே அரசினர் பூங்காவிற்குப் பக்கத்திலே பிரிக்ஸ் உயர்நிலைப் பள்ளியிலே உள்ள விளையாட்டு மைதானத்திலேதான் அது அமைக்கப்படுகிறதா? அல்லது வேறு எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் உள்ள உட்பகுதி இன்னும் காலியாக வீணுக இருக்கிறது, அந்த இடத்திலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஊட்டி நகர்ப்புறத்தில், லாலி இன்ஸ்டிட்யூட் அருகாமையில் சர்வே எண் 4202,4204, பிளாக் எண் 88, 89-ல் மேற்படி விளையாட்டு அரங்கைக் கட்டுவதற்கான கருத்துரு உள்ளது. மேற்படி கருத்துருவுக்கான திட்டங்களும், செலவு மதிப்பீடுகளும், பொதுப் பணித் துறையின் வட்டார அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. திட்டங்களைப் பெற்ற பின்னர் அரசிடம் தேவையான நிதி உதவிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விண்ணபிக்கும்போது, அரசு அக்கறையுடன் பரிசீலிக்கும்,